**விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2016**

---

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சகல பொருட்களும் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,184,050 பெறுமதியான 133 கண் வில்லைகள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் விழிப்புலனற்றோருக்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 513,678 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,256,732 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் வீழ்ச்சி ரூபா 1,770,409 ஆக இருந்தது. இவ்வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைளுக்கான செலவினம் ரூபா 2,012,165 ஆல் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம்

- (அ) விழிப்புலனற்றோருக்கு கல்விசார் மற்றும் தொழிற் பயிற்சி வசதிகளை வழங்குதல். விழிப்புலனற்றோருக்காக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சுயதொழிலுக்காக நிதியுதவியும் வழிகாட்டல்களும் வழங்குதல்.

- (ஆ) விழிப்புலனற்றோருக்காக கலைப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அல்லது தொழிற் பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில், அவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குதல்

(இ) விழிப்புலனற்றோருக்கான நலன்புரிக்கான உத்தேசத் திட்டங்களை செயற்படுத்தல்.

(ஈ) விழிப்புலனற்றோர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்காக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.

(உ) சம உரிமைகள் மற்றும் சம சந்தர்ப்பங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விழிப்புலனற்றவர்களை தவிர்க்கும் நிலைமையை அகற்ற செயற்படுதல்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 8,059,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்நோக்கங்களில் (அ), (இ) மற்றும் (உ) ஆகிய நோக்கங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 7,549,000 தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 6,839,940 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 250 பிள்ளைகளுக்காக கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்காக ரூபா 3,800,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் லுவிபிரேல் புலமைப்பரிசில், உயர்தர மாணவர்களுக்காக உதவிப்பணம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிப்பணம் என உதவியாக ரூபா 1,307,100 தொகையான நிதியுதவிகள் 231 பேருக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் போது முன்னைய ஆண்டிற்குரிய 03 மாதங்களுக்கான கொடுப்பனவுகள் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிஏற்பாடுகளில் அதற்காக ரூபா 177,000 செலவிடப்பட்டிருந்தது, அத்தாமதத்தை தவிர்ப்பதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டில் 165 மாணவர்களுக்கு மாத்திரமே நிதியுதவி வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 231 மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டு கருத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்றை காட்டியிருந்தது.

(ஆ) புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 நிறுவனங்களில் விழிப்புலனற்ற 36 நபர்களுக்காக ரூபா 1,750,000 தொகையான உதவிப்பணத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 16 பேருக்கு ரூபா 1,185,760 ஆன உதவிப்பணம் வழங்கப்பட்டிருந்தன. முன்னைய 06 ஆண்டுகளிலும் 07 மதியுரையாளர்களால் 16 மாணவர்களுக்கு பயிற்சியளித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வெண்ணிக்கையில் அதிகரிப்பொன்று மீளாய்வாண்டிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) சீதுவ பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்பட்ட மகளிர் விழிப்புலனற்றோர் நிலையத்தின் மூலம் 03 மாணவர்களுக்கு மாத்திரம் தையல் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளைக் கருத்திற்கொள்ளும் போது பயனாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்படாமையால் பயிலுனர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது விளையாட்டு திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 200,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) விழிப்புலனற்றவர்களுக்கு கலைப் பாடநெறிகளை தொடர்வதற்கோ அல்லது தொழிற்பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கோ முடியுமான வகையில் அவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது சகல விழிப்புலனற்றோரினதும் ஊனமுற்றோர்களினதும் எண்ணிக்கை தொடர்பான தரவுப் தளமொன்றை பேணிச் செல்லல் மற்றும் விழிப்புலனற்றோருக்கான சமூக பாதுகாப்புத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பொறுப்பு 13 உறுப்பினர்களுடன் கூடிய முகாமைத்துவ சபை ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சபையின் இரு அங்கத்தவர்கள் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் நடாத்தப்பட்ட எந்தவொரு முகாமைத்துவ சபைக் கூட்டங்களிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) நிகழ்ச்சித்திட்ட நிர்வாகம் | விழிப்புலனற்றோர்களுக்கான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் ஒழுங்குசெய்யப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | கல்வி மற்றும் காலாசார நடவடிக்கைகளுக்காக போதியளவில் மானியங்கள் வழங்கப்படாமை. |